[2013 அக்டோபர் 25

முற்பகல் 11–35

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணையின்படி, சேலம் மாவட்டம் சங்ககிரியில் தீரன் சின்னமலை அவர்களுக்கும், விருதுநகரில் தியாகி சங்கரலிங்கனார் அவர்களுக்கும், சிவகங்கையில் வேலுநாச்சியார் அவர்களுக்கும், சென்னை இராயபுரத்தில் சிங்காரவேலர் மற்றும் ஜீவரத்தினம் அவர்களுக்கும் மணிமண்டபங்கள் மற்றும் நினைவுச் சின்னங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. தூத்துக்குடி மாவட்டம், கயத்தாறில் வீரபாண்டிய கட்டபொம்மன் அவர்களுக்கு மணிமண்டபம் அமைக்கவும், திருவாரூரில் மனுநீதி சோழனுக்கு நினைவு மண்டபம் அமைக்கவும், சிவகங்கையில் வீரத்தாய் குயிலிக்கு நினைவுச் சின்னம் அமைக்கவும், திண்டுக்கல்லில் ஹைதர் அலி மற்றும் திப்புசுல்தான் ஆகியோருக்கு மணிமண்டபம் அமைக்கவும், கடலூர் மாவட்டம், சிதம்பரத்தில் சுவாமி சகஜானந்தா அவர்களுக்கு மணிமண்டபம் அமைக்கவும் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டு, அதற்கான ஆயத்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இத்தகைய சீரிய பணிகளைச் சிறப்புடன் ஆற்றி, பொற்கால ஆட்சி நடத்திவரும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனிவான கவனத்திற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை எடுத்துச்செல்லப்பட்டு, பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 30, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. தங்கவேல், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

30—

மின்னணு ஆளுமை

***7768—திரு. கே. தங்கவேல்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மின்னணு ஆளுமையின்கீழ் மனுக்களின் நிலையை அறிந்துகொள்ளும் வசதியை வட்டாட்சியர் அலுவலகங்களுக்கும் விரிவுபடுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2013 அக்டோபர் 25]

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பணிவோடு வணங்குகிறேன்.

(அ) மற்றும் (ஆ) ஒவ்வொரு திங்கட்கிழமையன்றும் மாவட்ட ஆட்சியர்கள்/வருவாய்க் கோட்டாட்சியர்கள் மற்றும் வட்டாட்சியர்கள் தங்களது தலைமையிடத்திலேயே இருந்து பொதுமக்களிடமிருந்து மனுக்களைப் பெற்று, அவர்களது குறைகளைத் தீர்த்து வருகின்றனர். தற்போது மின் ஆளுகையின்கீழ் வட்டாட்சியர் அலுவலகங்களில் பெறப்படும் மனுக்களின் அவ்வப்போதைய நிலையை அறிந்துகொள்வதற்கான மென்பொருள் தற்போது வட்டாட்சியர் அலுவலகங்களில் இல்லை. எனவே, வட்டாட்சியர் அலுவலகங்களில் மக்கள் குறை தீர்க்கும் நாட்களில் பெறப்படும் மனுக்களைக் கணினியில் பதிவு செய்து, மனுக்களின் நிலை குறித்து அறிந்துகொள்ளும் வசதி செய்து கொடுக்க, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச்சென்று, உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. தங்கவேல் அவர்கள்.

திரு. கே. தங்கவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்னணு ஆளுமையின்கீழ் மனுக்களின் நிலையை அறிந்துகொள்ளும் வசதி வேலூர் மற்றும் பெரம்பலூர் மாவட்டங்களில் இருப்பதாகத் தகவல்கள் இருக்கின்றன. இந்த வசதியை மற்ற வட்டாட்சியர் அலுவலகங்களுக்கும் விரிவுபடுத்தவேண்டும். அப்படி விரிவுபடுத்துகிறபொழுது ஏற்கெனவே இருக்கக்கூடிய ஊழியர்களுக்கு அதற்கான பயிற்சி கொடுத்து பயன்படுத்தவேண்டும். மற்றவர்களைத் தொகுப்பூதிய அடிப்படையில் பயன்படுத்தினால் முறையானதாக இருக்காது. முழுமை அடைகிற நடவடிக்கையும் மேற்கொள்ள முடியாது என்பதைத் தெரிவித்து, எல்லாப் பகுதிகளுக்கும் அதை விரிவுபடுத்த வேண்டுமாய் தங்கள்மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலேயே கிராம நிருவாக அலுவலர்களுக்கு மடிக்கணினி கொடுத்து, பயிற்சியும் கொடுத்த அரசு, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, வட்டாட்சியர் அலுவலகங்களில் பணிபுரியும் அலுவலர்களுக்கு அவ்வப்பொழுது கணினிப் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. பல்வேறு பணிகளுக்கு, களப் பணிகளுக்குச் செல்ல வேண்டியிருப்பதால், கணினியில் பதிவு செய்யும் பணியை அலுவலர்கள் முழுமையாகச் செய்ய முடியாத காரணத்தால், தற்காலிகமாக Data Entry Operator–கள் நியமனம் செய்யப்பட்டு, நில ஆவணங்கள் கணினியிலே பதிவு செய்யப்பட்டு வருகிறது. இருப்பினும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச்சென்று, உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. தங்கவேல் அவர்கள்.

திரு. கே. தங்கவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச்சென்று கவனிப்பதாகச் சொன்னதற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

*[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]*